# தேவனுடைய மனுஷன்

## (எலியாவின் வாழ்க்கையிலிருந்து - பாகம் 1)



**எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது (யாக் 5:17,18).**

மேற்க்கண்ட வசனத்தில் நாம் கவனிக்க வேண்டிய இரண்டு காரியங்கள் (1) எலியா தீர்க்கதரிசியிடம் இருந்து வெளிப்பட்ட தேவ வல்லமை. (2) நம்மைப்போல பாடுள்ள மனுஷன். இவை இரண்டும் வித்தியாசமான வாழ்க்கை அனுபவங்கள். முதல் அனுபவம் தேவ வல்லமையால் நிரம்பி இயற்கைக்கு மேற்ப்பட்ட காரியங்களை செய்தல், அதே நேரத்தில் இரண்டாம் அனுபவம் இவ்வுலகத்தில் உள்ள சாதாரண மனிதனை போல வாழ்க்கையின் போராட்டங்களை எதிர்கொள்தல். இன்றைய தேவ பிள்ளைகளின் வாழ்விலும் விஷேசமாக ஆண்டவருடைய ஊழியத்தை

செய்கிறவர்களின் வாழ்க்கையிலும் தேவன் இவ்விதமான இரண்டு அனுபவங்களையும் தருகிறார்.

ஒரு புறத்தில் அபிஷேகத்தால் நிரம்பி, தேவ பிரசன்னத்தையும் அவர் நடத்துதல்களையும் உணர்ந்து வாழ்க்கையில் அற்புதங்களை பெற்று வாழ்கிற வாழ்க்கை, அதே நேரத்தில் சாதாரண இவ்வுலக காரியங்களில் மற்ற மனிதர்களோடும், வாழ்க்கையின் சூழ்நிலைகளோடும் போராடுகிற போராட்டம். இவ்விரண்டையும் சமநிலையோடு எதிர்கொள்கிற பக்குவம் ஒரு தேவ பிள்ளைக்கு தேவை. அதற்காகவே நாம் உள்ளான மனிதனில் ஒவ்வொரு நாளும் வளர வேண்டும். இல்லையேல் தேவ பிரசன்னத்தில் இருக்கும் பொழுது வாழ்க்கையை மகிழ்ச்சிக்குறியதாக எண்ணி நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் தேவனுக்கு அர்பணிப்போம். ஆனால் வாழ்க்கையின் போராட்டங்களை காணும்பொழுது வாழ்க்கையை கசப்பாக எண்ணி, நாம் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் சோர்வுக்குள்ளாவோம்.

இப்படிப்பட்ட அனுபவங்கள் எலியா தீர்க்கதரிசியின் வாழ்க்கையில் ஏற்பட்டது. அவற்றை நாம் காண்போம். **1 இரா 17:1** கூறுகிறது **“கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்”**. இங்கு வேதம் எலியாவை அறிமுகப்படுத்தும் பொழுது, அவர் மூலமாய் வெளிப்பட்ட தேவ வல்லமையை வெளிப்படுத்துகிறது. **“என் வாக்கின்படியே”** என்ற வார்த்தையானது தேவனால் அவருடைய ஊழியக்காரனுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை குறிக்கிறது. அதே வேளையில், அடுத்த சில வசனங்களிலேயே, அவர் தன் பாதுகாப்பிற்காகவும், உணவிற்க்காகவும் ஒரு இடத்தை விட்டு மற்றொரு இடத்திற்கு செல்ல வேண்டியதாயிருந்தது.

காகங்கள் கொண்டு வரும் உணவை உண்டு, ஆற்றின் தண்ணீரை குடித்து தனிமையாய் வாழவேண்டிய சூழ்நிலைவந்தது. ஆற்றின் நீர் வற்றி போனபின்பு தேவன் அவரை சாறிபாத் ஊர் விதவையின் வீட்டில் வைத்து போஷித்தார். இங்கு தேவனால் அற்புதவிதமாய் போஷிக்கபட்டாலும், சாதாரண மனிதனுக்கு இருக்கும் ஒரு நிலையான வாழ்க்கைக்கூட இல்லாமல், தேவன் சொன்ன இடத்திற்கெல்லாம் அவர் செல்ல வேண்டியிருந்தது. இங்கு நாம் கற்றுக்கொள்கிற ஒரு பாடம், தேவனை

அறியாத மக்கள் வாழ்க்கையின் தேவைகள் எதற்கும் கவலைபடாமல், வாழ்க்கையை அனுபவித்து சுகமாய் ஓரிடத்தில் வாழ்க்கையில், தேவ வல்லமையை தங்கள் வாழ்வில் வெளிப்படுத்தும் தேவபிள்ளைகளையோ தேவன் இப்படியாய் சில போராட்டங்களுக்குள்ளாக அனுமதிக்கிறார்.

உதாரணமாக, துன்மார்க்க ஜீவியம் செய்யும் எத்தனையோ பேர் மாடமாளிகைகளை கட்டி வாழ்ந்திருக்கையில், தேவ சபையை நடத்தும் மேய்ப்பர் ஊழியத்தை செய்யும் தேவ பிள்ளைகள் தேவனை ஆராதிக்க ஓர் நிலையான இடம் இல்லாமல் கஷ்டப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் சிலகாலம் தேவன் அவர்களை இவ்வித பாதையில் நடத்துகிறார். எனவே இப்படிப்பட்ட போராட்டங்கள் ஏற்படும் பொழுது சரீரத்தில் ஒரு வேளை சோர்வு ஏற்படலாம். ஆனால் ஆவியில் ஒருபோதும், ஒரு தேவபிள்ளை சோர்ந்துபோகக்கூடாது. அதையே நாம் எலியாவின் வாழ்விலும் காண்கிறோம்.

அநேகநாள் சென்றபின்பு (மூன்று வருடம்) மறுபடியும் தேவன் எலியாவின் மூலமாய் தன் வல்லமையை வெளிப்படுத்தினார். தேவன் நம்மை சில காலம் அமைதியாய் இருக்க சொன்னால், அமைதியாக இருக்கிற அக்காலம் தேவன் நம்மை அடுத்த நிலைக்கு ஆயத்தப்படுத்துகிற காலம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அமைதியாய் இருந்த அந்த காலத்திலும் தேவன் எலியாவின் மூலமாய் சாறிபாத் விதவையின் மகனை உயிரோடு எழுப்பி தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு காரியம் 1 இரா 17:20 வசனம். இவ்வசனம் கூறுகிறது **"என் தேவனாகிய கர்த்தாவே, நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகப்பண்ணினதினால் அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரோ என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு;"**. இங்கு நாம் தேவன் எவ்வளவாய் எலியா தீர்க்கதரிசிக்கு தாழ்மையை கற்றுக் கொடுத்திருந்தார் என்பது விளங்குகிறது.

தேவனே தன்னை போஷிக்கிறார் என்றும், இவ்விதவை அதற்கு ஒரு வாய்க்காலாய் இருக்கிறாள் என்றும் உணர்ந்த அவர், **"தீர்க்கதரிசியான என்னை போஷித்த இந்த விதவைக்கு உதவும்"** என்று கூறாமல் **"நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவை"** என்று கூறுவதிலிருந்து, தான் எவ்வளவு பெரிய தீர்க்கதரிசியாய் இருந்தாலும், தன்னை போஷிக்கிறவர் கர்த்தர் என்றும், அவருடைய திட்டத்தில் இருக்கிற (விதவை) ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் என்பதையும் கற்றுக்கொள்ள தேவன் உதவிசெய்தார்.

நாமும் கூட நம் வாழ்க்கையில் தேவனிடத்தில் இருந்து பெரிய (ஆவிக்குரிய) அனுபவங்களை பெற்றிருந்தாலும், நம் வாழ்க்கையில் நம்மோடு இடைப்படுகிற ஒவ்வொரு சாதாரண மனிதர்களும் தேவ பார்வையில் முக்கியமானவர்கள் என்றும், நாம் பெற்ற அனுபவங்களினால் அல்ல தேவன் நம்மை நேசிப்பதாலேயே நம்மையும் போஷிக்கிறார், நடத்துக்கிறார் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இறுதியாக சாறிபாத் விதவை எலியாவை குறித்து கூறின சாட்சியை **1 இரா 17:24** காணலாம் **"அப்பொழுது அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி: நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள்"**.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒன்று எலியா பாடுள்ள மனுஷராய் இருந்தாலும் தேவனுடைய மனுஷராய் இருந்தார். கர்த்தரின் வார்த்தை அவர் மூலமாய் வெளிப்பட்டது. இதுவே ஒவ்வொரு தேவ பிள்ளையின் அனுபவமாய் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட எலியா தீர்க்கதரிசி மூலம் தேவன் சர்வ இஸ்ரவேலர் முன்பும் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். பாடுள்ள மனிதராய் இருந்த எலியாவை தேவனுடைய மனிதன் என்பதை எல்லாரும் அறிந்து கொள்ளும்படியாய் செய்தார். இதை நாம் அடுத்த பாகத்தில் (பாகம் 2) தியானிப்போம். ஆண்டவர்தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதிப்பாராக. நம் ஒவ்வொருவரையும் தேவ மனிதர்களாய் நிலை நிறுத்துவாராக. அல்லேலுயா, ஆமென்.